**திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்**

**25-01-2025அன்று வழங்கிய**

**தூதுரைப்பணி ஞாயிறு செய்தி 2025**

# மக்களிடையே எதிர்நோக்கின் தூதுவர்களாக..... நற்செய்திப் பணியாளர்களாக.....

அன்புச் சகோதரர்களே, சகோதரிகளே !

2025 யூபிலி ஆண்டின் மையச்செய்தி "எதிர்நோக்கு" என்பதாகும். இவ்வாண்டின் தூதுரைப்பணி ஞாயிறுக்கு நான் தேர்ந்துள்ள செயல்நோக்கமும் அதுவே: 'மக்களிடையே எதிர்நோக்கின் தூதுவர்களாக... நற்செய்திப் பணியாளர்களாக......' கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி எதிர்நோக்கின் தூதுவர்களாக, அதனைக் கட்டியெழுப்புகிறவர்களாக, ஒவ்வொரு கிறிஸ்தவரும் திருமுழுக்குப் பெற்ற குழுமமாகிற திருஅவையும் பெற்றுள்ள அழைப்பை இது நினைவூட்டுகிறது. இறைவனிடமிருந்து கிடைக்கப்பெறும் அருளின் விளைவாக இது சாத்தியமாகும். "அவர் தம் பேரிரக்கத்தின்படி, இறந்தோரிடமிருந்து எழுந்த இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலால், நமக்குப் புதுப்பிறப்பு அளித்துள்ளார். இவ்வாறு, குன்றா எதிர்நோக்குடன் நாம் வாழ்கிறோம்." (1பேது 1:3-4). நம் கிறிஸ்தவ தூதுரைப்பணியின் அடையாளத்துடன் தொடர்புடைய சில முக்கியக் கூறுகளை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தெளிவற்று, அச்சமூட்டும் முறையில் இவ்வுலகைக் கவ்வி நிற்கும் ஒளிமறைவுப் பகுதியில் ஒளிர்ந்து, மக்களின் எதிர்நோக்கிற்குப் புத்துயிரூட்ட, திருஅவை பணிக்கப்பட்டுள்ளது. புதிய நற்செய்தி அறிவிக்கும் பணிச்செயல்பாடுகளின் காலத்தை, பற்றியெரியும் ஊக்கத்துடன் தொடங்கித் தொடர, இறை ஆவியாரின் தூண்டுதலுக்கு நம்மை உட்படுத்திட இக்கூறுகள் உதவும். .

1. **நமது எதிர்நோக்காகிற கிறிஸ்துவின் அடிச்சுவடுகளில்...**

கி.பி 2000 புனித ஆண்டு கொண்டாட்டத்திற்குப்பிறகு மூன்றாம் நூற்றாண்டில் கொண்டாடப்பெறும் இந்த சாதாரண யூபிலி ஆண்டில் நம் பார்வையைக் கிறிஸ்துவின்மீது பதியவைப்போம். ஏனெனில் அவரே "நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்." (எபி 13:8); வரலாற்றின் மையம். வரலாற்றில் என்றும் பிரசன்னமாயிருக்கிற அவர், "இன்று" மறைநூல் வாக்கு நிறைவேறியதாக நாசரேத்து தொழுகைக்கூடத்தில் முழங்குகிறார். இவ்வாறு மனித இனம் முழுமைக்கும் இறையாட்சியின் நற்செய்தியை முழக்கமிட்டு அறிவித்து "ஆண்டவர் அருள்தரும் ஆண்டினைத்" தொடங்கிவைக்க, தூய ஆவியாரால் அருள்பொழிவு செய்யப்பெற்று, இறைத்தந்தையால் அனுப்பிவைக்கப்பெற்றவர் 'தாமே' என்பதை வெளிப்படுத்துகிறார். (லூக் 4:16-21)

உலக முடிவுவரை நீடிக்கும் "இன்று" என்ற இந்த மறைபொருளில் அனைவருக்கும், குறிப்பாக, 'இறைவன் ஒருவரே தம் எதிர்நோக்கு' என்று நம்பியிருப்போருக்கு, 'கிறிஸ்துவே மீட்பின் நிறைவு' என்ற உண்மை நீடிக்கிறது. இவ்வுலகில் வாழ்ந்தபோது, "அலகையின் கொடுமைக்கு உட்பட்டிருந்த அனைவரையும் அவர் விடுவித்து, அனைவரையும் குணமாக்கி, எங்கும் நன்மை செய்துகொண்டே சென்றார்." (காண். திப 10:38). இவ்வாறு. தேவையில் உழல்வோர் அனைவருக்கும், அவர்கள் இறைவனில் கொண்டிருந்த எதிர்நோக்கை மீட்டுத் தந்தார். கெத்சமனித் தோட்ட மனப்போராட்டத்தின் கடுந்துயர், சிலுவையில் தொங்கியபோது அனுபவித்த தாங்கொணா வேதனை , ஆகிய மனத்தளர்ச்சிக்கும் நம்பிக்கை இழப்பிற்கும் இட்டுச்செல்லும் நெருக்கடியான தருணங்களில்கூட, பாவம் தவிர பிற மனித வலுவின்மைகள் அனைத்ததையும் அவர் அனுபவித்ததார். மனுக்குலத்தை மீட்கும் இறைத்திட்டத்தை, கீழ்ப்படிதலுடன் நம்பி, அனைத்தையும் இறைத்தந்தையிடம் ஒப்படைத்தார். இறைவன் வாக்களிக்கும் வளமான எதிர்காலத்தையும் நம்பிக்கையையும் அளிப்பதற்கான நல்வாழ்வின் திட்டம் அது. (காண். எரே 29:11). இவ்வாறு அவர் எதிர்நோக்கின் இறைத்தூதரானார். இறைவன் தந்த தூதுரைப்பணியை, தீவிர சோதனைகள் நடுவிலும், காலங்காலமாகச் செயல்படுத்திவரும் அனைவருக்கும் சிறந்த மாதிரியானார்.

தமது மறைமுக உடனிருப்பை உறுதிசெய்து எல்லா மக்களினத்தார்க்கும் நற்செய்தியைப் பறைசாற்ற அனுப்பிய தம் சீடர்கள் வழியாக, மானிடர் அனைவருக்குமான எதிர்நோக்கின் திருப்பணியை ஆண்டவர் இயேசு தொடர்கிறார். ஏழையர், பாதிக்கப்பட்டோர், மனத்தளர்ச்சியுற்றோர், ஒடுக்கப்பட்டோர், நசுக்கப்பட்டோர். ஆகியோர்பக்கம் சாய்ந்து நின்று, அவர்களைத் தூக்கி நிறுத்தி, அவர்களுக்கு 'ஆறுதல் என்னும் மருந்திட்டு, எதிர்நோக்கு எனும் குணமளிக்கும் எண்ணெய் ஊற்றி' கண்காணிக்கிறார் கிறிஸ்துவின் தூதுரைப் பணியைத் தொடர்ந்தாற்றும் சீடர்களின். குழுமமாகிய திருஅவையும், தன் ஆண்டவரும் தலைவருமான அவருக்குச் கீழ்ப்படிந்து, அவர் காட்டிய அதே பணியார்வத்துடன் தன்னை அர்ப்பணித்து, அனைத்து நாடுகளிலும் அந்தத் தூதுரைப்பணியைத் தொடர்கிறது. சமய வதைகள், கொடுந்துன்பங்கள், இன்னல்கள், தன் உறுப்பினர்களின் `மனித வலுவின்மையால் விளையும் குறைபாடுகள் மற்றும் தோல்விகள் ஆகியவற்றை எதிர்கொள்ளும் நிலையிலும் கிறிஸ்துவின் அன்பினால் தொடர்ந்து உந்தப்பட்டு, அவருடன் இணைந்து தன் தூதுரைப்பணியில் பயணிக்கிறது. இப்பயணத்தில், அவரைப்போன்று, அவருடன், துன்புறும் மனித இனத்தின் வேண்டுகோளுக்கு செவிமடுக்க வேண்டும். மீட்பிற்காக உறுதியான எதிர்நோக்கோடு காத்திருக்கும் ஒவ்வொரு படைப்புயிரும் எழுப்பும் ஆழ்ந்த பெருமூச்சின் ஒலியைக் கவனமுடன் செவிமடுத்துக் கேட்க வேண்டும் இத்தகைய "நகர்வற்ற நிலையை விட்டுவிட்ட, தன் ஆண்டவருடன் உலகின் வீதிகளில் நடமாடுகிற, உயிரோட்டத்துடன் தூதுரைப்பணி செய்யும் திருஅவைதான்" உண்மைத் திருஅவை. .(ஆயர் மாமன்ற நிறைவுத் திருப்பலியில் மறையுரை, 27.10.2024) இத்தகைய திருஅவையைத்தான், தம் அடிச்சுவடுகளை எப்பொழுதும் என்றென்றும் பின்பற்ற, அதன் தலையாகிற கிறிஸ்து அழைக்கிறார்.

நம் வாழ்விடங்களில், அவற்றின் சூழ்நிலைகளில், அவருடன், அவரில், அனைவருக்கும் எதிர்நோக்கின் அடையாளங்களாகவும் தூதுவர்களாகவும் ஆவதற்கு எழுச்சியூட்டப்பெறுவோமாக. திருமுழுக்குப் பெற்ற அனைவரும், கிறிஸ்துவின் தூதுரைப் பணியாளர்கள் என்ற முறையில் அவர் வாக்களித்த எதிர்நோக்கு, உலகெங்கும் ஒளிர்ந்திடச் செய்வோமாக.

## 2.கிறிஸ்தவர்கள் : மக்களிடையே எதிர்நோக்கை எடுத்துச்சென்று அவர்களில் அதனைக் கட்டியெழுப்புபவர்கள்.

கிறிஸ்து ஆண்டவரைப் பின்பற்றும் கிறிஸ்தவர்கள் தாங்கள் வாழும் அன்றாடச் சூழமைவுகளில், எதிர்நோக்கின் நற்செய்தியைப் பிறருடன் பகிர்ந்துகொள்ள அழைக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறு அவர்கள் எதிர்நோக்கை மக்களிடையே எடுத்துச்சென்று, அவர்களில் அதனைக் கட்டியெழுப்புகிறார்கள். “மகிழ்வும் எதிர்நோக்கும், இன்றைய மனிதரின் வாழ்வில், குறிப்பாக ஏழையர் மற்றும் துன்புறுவோர் அனைவரின் வாழ்வில் உள்ளன. இம்மனிதரின் மகிழ்வும் எதிர்நோக்கும், ஏக்கமும் கவலையும், கிறிஸ்தவர்களுக்கும் முற்றிலும் உரியனவே; கிறிஸ்துவைப் பின்பற்றும் இவர்களின் இதயங்களில் உண்மையான மனிதக் கூறுகள் யாவும் எதிரொலிக்கத்தான் செய்கின்றன.” (இன்றைய உலகில் திருச்சபை, எண் 1)

கிறிஸ்தவக் குழுமங்களின் ஒவ்வொரு காலகட்ட உணர்வை வெளிப்படுத்தும் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் புகழ்பெற்ற இந்த அறிக்கை, திருஅவையின் உறுப்பினர்களைத் தூண்டியெழுப்பி, அனைத்து சகோதரர், சகோதரிகளோடும் இணைந்து பயணிக்க நமக்கு உதவுகிறது. பிறவினத்தாரிடையே தூதுரைப்பணியாற்றுவோரை இங்கே சிறப்பாக நினைவுகூர்கிறேன். இயேசு ஆண்டவரின் அழைப்பை ஏற்று, கிறிஸ்துவில் இறைத்தந்தை வெளிப்படுத்திய அன்பை அறிவிக்க, நீங்கள் அனைத்து நாடுகளுக்கும் பயணித்துள்ளீர்கள். இதற்காக நான் உங்களைப் பெரிதும் பாராட்டுகிறேன், நன்றி கூறுகிறேன். உயிர்த்த கிறிஸ்து, எல்லா மக்களினத்தார்க்கும் நற்செய்தி அறிவிக்கிற கட்டளையைத் தம் சீடர்களுக்குத் தந்து அனுப்பியதும் (காண். மத் 28:18-20), அவர்கள் அதனை ஏற்று செயல்பட்டதுபோன்று, உங்கள் தூதுரைப்பணி, ஒரு பதிலிருப்பே ஆகும். இவ்வாறு, தூய ஆவியாரின் வல்லமையால் உந்தப்பட்டு, எல்லா மக்களினத்திடையேயும் தூதுரைப்பணியாற்றி இயேசு ஆண்டவர் நமக்குத் தந்துள்ள உயர்ந்த எதிர்நோக்கிற்கு உலகிலே சான்று பகர அழைப்புப் பெற்றுள்ள திருமுழுக்குப் பெற்ற அனைவரோடும், நீங்களும் சிறந்த அடையாளங்களாய் விளங்குகிறீர்கள்

இந்த எதிர்நோக்கு ‘எட்டக்கூடிய தொலைவு’ என்று இவ்வுலகு காட்டும் நிலையற்றவைகளைத் தாண்டி, இப்போதே நாம் பங்கேற்கிற தெய்வீக உண்மைகளை நோக்கிய கதவுகளைத் திறந்துவைக்கிறது, புனித ஆறாம் பவுல் குறிப்பிடுவதுபோல, கிறிஸ்து தரும் மீட்பை, இறைஇரக்கத்தின் கொடையாக, புனித திருஅவை, அனைவருக்கும் வழங்குகிறது. “அம்மீட்பு, பொருள் மற்றும் ஆன்மீகத் தேவைகளை மட்டும் சார்ந்தது அல்ல.... இம்மைக்குரிய ஆசைகள், எதிர்பார்ப்புகள், செயல்பாடுகள்/ மற்றும் போராட்டங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கியது அல்ல. மாறாக, இத்தகைய எல்லைகளையெல்லாம் தாண்டி 'இறைவன் என்ற முழுமையில் ஒன்றிணைதல்' என்கிற நிறைவுக்கு இட்டுச் செல்வதாகும். ஆக, மீட்பு என்பது நிறைவுக் காலத்தை நோக்கியது; அனைத்தையும் கடந்தது. அது இம்மை வாழ்வில் தொடங்கித் தொடர்கிறது; எனினும், அது நிலைவாழ்வில் நிறைவு பெறுகிறது.” (இன்றைய உலகில் நற்செய்திப்பணி எண் 27)

உலகின் பல ‘முன்னேறிய’ நாடுகளில் பின்வரும். சமூக அவலங்கள் மலிந்து காணப்படுகின்றன: பரவலான குழப்ப உணர்வு, தனிமை, முதியோரின் நியாயமான தேவைகளைக் கண்டுகொள்ளாமை, தேவையில் உழலும் அடுத்தவர்க்கு உதவுவதில் காட்டும் தயக்கம் என்பன. இத்தகைய சூழமைவுகளில், கிறிஸ்தவக் குழுமங்கள், எதிர்நோக்கினால் உந்தப்பட்டு, புதிய மானுடத்தை உருவாக்குவதில் முன்னோடிகளாக விளங்க முடியும். இது உன்னதமான செயல்முறை அல்லவா? தொழில்நுட்பத்தில் மிகவும் முன்னேறிய நாடுகளில் ‘நெருக்கமான உறவு நிலை' மறைந்து வருகிறது. நாம் அனைவரும் ஒருவர் ஒருவரோடு தொடர்பில் இருக்கிறோம்; ஆனால் உறவில் இல்லை. செயல்திறன் பற்றிய எண்ணமே நம்மை ஆட்கொண்டுள்ளது. இவ்வுலகு சார்ந்த பொருள்கள் மேலுள்ள பிடிப்பும் பேரார்வமும் நம்மைச் சுயநலவாதிகளாக மாற்றி, பிறர்நலம் பேண இயலாதவர்களாய் ஆக்கிவிடுகிறது. குழும வாழ்வில் நாம் பெறும் நற்செய்தி அனுபவம், நம்மில் முழுமைபெற்ற, மீட்படைந்த, நலமான மனிதப் பண்பை மீட்டெடுக்க இயலும்.

இதற்கு, யூபிலி பற்றிய அதிகாரப்பூர்வ ஆணை மடலில் 7 முதல் 15 வரையுள்ள எண்களில் குறிப்பிட்டுள்ள பணிகளைச் செயல்படுத்த மீண்டும் அழைப்பு விடுக்கிறேன். அவற்றைச் செயல்படுத்தும்போது ஏழையரிலும் ஏழையர், வலுவற்றோர், நோயுற்றோர், முதியோர் மற்றும் பொருள் முதன்மையிலும் நுகர்வுச் செயல்பாடுகளிலும் மூழ்கிக் கிடக்கும் சமுதாயத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டோர் ஆகியோர்மேல் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும். இதனைக் கடவுளின் 'பாணி'யில் செய்ய வேண்டும். அதாவது, அவர்களின் வாழ்விடச் சூழல்களில் அவர்களுடன் நெருக்கமாகவும் மென்மையுடனும் பழகி, பரிவிரக்கம் காட்டி, அவர்களுடன் தனிநபர் உறவை வளர்த்துக்கொள்ள வேண்டும். (காண். நற்செய்தியின் மகிழ்ச்சி, எண்கள் 127 - 128) நாம் எதிர்நோக்குடன் வாழ்வது எப்படி, என்பதைப் பல சமயங்களில் அவர்கள்தான் கற்றுத்தருகிறார்கள். தனிநபர் உறவுகளின் வழியாக, இரக்கம் வழிந்தோடும் இறைவனின் பேரன்பை அவர்களுக்குக் கொண்டுசேர்க்க இயலும். அப்போது, 'கிறிஸ்துவின் இதயத்தினின்று பொங்கி வழியும் அன்பே, தொடக்க நற்செய்திப் போதனையின் மையம்' என்பதை நாம் உணர்வோம். நாம் இறைவனிடமிருந்து பெற்றுக்கொண்ட எதிர்நோக்கை, இயேசுவின் அணைகடந்த அன்பு எனும் மூலத்திலிருந்து பெற்று எளிதாகப் பிறருக்கு வழங்க முடியும். (காண் 1 பேது 1:21) இவ்வாறு, நாம் கடவுளிடமிருந்து பெற்றுள்ள அதே ஆறுதலைப் பிறருக்குக் கொண்டுசேர்க்க முடியும். (காண். 2 பேது 1:3-4). இயேசுவின் இறை - மனித இதயத்தின் வழியாக, இறைவன், அனைவரையும் அவரது அன்பின்பால் ஈர்த்து ஒவ்வொருவரின் இதயத்துடன் பேச விரும்புகிறார். "இயேசுவின் இரக்கம் நிறைந்த இதயத்துடன், இறைத்தந்தையின் அன்புடன், இவ்வுலகம் முழுவதையும் அரவணைத்துக்கொள்ளும் அடையாளங்களாக விளங்கும் தூதுரைப் பணியைத் தொடரவே நாம் அனுப்பப்பெற்றிருக்கிறோம்." (திருத்தந்தையின் தூதுரைக் கழகங்களின் பொதுக்கூட்டத்தில் பங்கேற்றோருக்கு ஆற்றிய உரை 3-6-2023)

2. எதிர்நோக்கின் தூதுரைப்பணியைப் புதுப்பித்துகொள்வோம

எதிர்நோக்கின் தூதுரைப்பணியினுடைய அவசரத்தை எதிர்கொள்ளும் கிறிஸ்துவின் சீடர்கள், அப்பணியில் 'நிபுணத்துவம் பெற்ற சிற்பிகளாவது' எப்படி என்பதை முதலில் கண்டறிய

வேண்டும். மேலும் கவனம் சிதறிய, மகிழ்ச்சி இழந்த மனித இனத்தை மீட்டெடுக்கும் வழிமுறைகளையும் கண்டறிய வேண்டும். இந்த இலக்கை அடைய, ஒவ்வொரு திருப்பலிக் கொண்டாட்டத்திலும், குறிப்பாக, வழிபாட்டு ஆண்டின் உச்சமாகிற உயிர்ப்புப் பெருவிழாவின் முத்திருநாள்களிலும், நம் உயிர்ப்பு அனுபவத்தைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் மீட்பளிக்கும் இறப்பு-உயிர்ப்பில், என்றும் நிலைத்திருக்கிற 'வசந்த கால' வரலாற்றை அடையாளப்படுத்தும் ஆண்டவரின் பாஸ்கா கடத்தலில் நாம் திருமுழுக்குப் பெற்றுள்ளோம். இதன் விளைவாக, அனைவருடனும் பகர்ந்துகொள்ள எதிர்நோக்கின் நிறைவினால் நிரம்பி வழியும். 'வசந்த கால' மனிதர்களாக உருவாகிறோம். நாம் கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டிருப்பதாலும் 'சாவும் வெறுப்பும் மனித வாழ்வைத் தீர்மானிப்பவை அல்ல' என்பதை உணர்ந்திருப்பதாலும் இது சாத்தியமாகிறது. திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களிலும் அருளடையாளங்களிலும் நிகழ்த்தப்படும் பாஸ்கா மறைபொருள்களிலிருந்து, உலகளாவிய நற்செய்தி அறிவிப்புப்பணியாற்றத் தேவைப்படும் ஆர்வம், வேகம், மனவுறுதி, பொறுமை ஆகியவற்றை தூய ஆவியாரின் வல்லமை வழியாகப் பெற்றுக்கொள்கிறோம்."உயிர்த்து மாட்சியடைந்த இயேசு கிறிஸ்துவே நமது எதிர்நோக்கின் ஊற்று. அவர் நம்மிடம் ஒப்படைத்துள்ள தூதுரைப்பணியைத் தொடர்ந்தாற்றத் தேவைப்படுகிற அனைத்தையும் தந்து உதவிடாமலிரார்." . (நற்செய்தியின் மகிழ்ச்சி, எண் 275). கிறிஸ்தவர்களாகிய நாம், இறைவனிடமிருந்து பெற்றிருக்கிற கொடையும் பணியுமாகிற எதிர்நோக்கிற்குச் சான்று பகர, அவருடன் ஒன்றித்து அவரில் வாழ்கிறோம். இறைவேண்டலில் ஊன்றியிருப்போரே எதிர்நோக்கின் பணியாளர்கள்! ஏனெனில், வணக்கத்திற்குரிய பிரான்சிஸ் சேவியர் வான் துவான் கூறுவதுபோல, "இறைவேணடல் செய்பவரே எதிர்நோக்குபவர்" வான் துவான், தம் நீணட சிறையிருப்புக் காலத்தில், இறைவேண்டலில் பிரமாணிக்கமாய் இருந்தார்; நற்கருணைக் கொண்டாட்டத்தில் உறுதியாக இருந்தார்; இவ்விரண்டிலிருந்தே உரிய ஆற்றல் பெற்று எதிர்நோக்கில் தொடர்ந்து நிலைத்திருந்தார். இறைவேண்டல்தான் தூதுரைப்பணியின் முதன்மைச் செயல்பாடு.; அதுவே எதிர்நோக்கின் முதன்மை ஆற்றலுமாகும். இதனை நாம் மறவாதிருப்போமாக.

எனவே, ஆண்டவரின் அருள்வாக்கை, குறிப்பாக, சிறந்த சுருதி இசைவு கொண்டவையும் தூய ஆவியாரே உருவாக்கியவையுமான திருப்பாடல்களை அடிப்படையாகக்கொண்ட இறைவேண்டலில், எதிர்நோக்கின் தூதுரைப்பணியைப் புதுப்பித்துக்கொள்வோமாக. இடுக்கண்கள் மத்தியில், நம்மைச்சுற்றிக் காணப்படும் எதிர்நோக்கின் அறிகுறிகளைத் தேர்ந்து தெளிந்திட, திருப்பாக்களே நம்மைப் பயிற்றுவிக்கின்றன. ‘மக்களினத்தார் அனைவரும் கடவுளைப் போற்றிப் புகழவேண்டும்’ என்ற நிலையான தூதுரைப் பணி ஆவலை கொண்டிருக்கத் துணைநிற்கின்றன. இறைவேண்டல் செய்வதன் வழியாக, இறைவன் நமக்குள் ஏற்றிவைத்திருக்கும் எதிர்நோக்கின் சுடரை உயிரோட்டத்துடன் வைத்திருப்போம்; இதனால் அச்சுடர் பெருநெருப்பாக மாறும். இந்தச் சுடரின் தீ நம்மைச்சுற்றி வாழும் அனைவரிலும் ஒளியேற்றி, அவர்களை கதகதப்பாக வைத்திருக்கும். இறைவேண்டல் தூண்டியெழுப்புகிற நமது தெளிவான செயல்பாடுகளும் கருத்துணர்த்தும் செயற்குறிப்புகளும்கூட அவர்களில் ஒளியேற்ற உதவும்.

நிறைவாக, கிறிஸ்தவ எதிர்நோக்குபோன்று, நற்செய்தி அறிவிப்புப்பணியும், குழுமப் பண்புடையதாகும். இப்பணி, தொடக்கத்தில் நடைபெறும் நற்செய்திப் போதனை, அதை தொடர்ந்து நிகழும் திருமுழுக்கு வழங்குதலுடன் முடிவுறுவதில்லை. மாறாக, திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவருடனும் இணைந்து நற்செய்தி பாதையில் பயணிப்பதன் வழியாகக் கிறிஸ்தவக் குழுமங்களைக் கட்டியெழுப்புவதில் தொடர்கிறது. இன்றைய சமுதாயத்தில், திருஅவையின் உறுப்பினர் என்ற நிலை, ஒரே முறையில் அடைந்து விடக்கூடிய ஒன்றல்ல. அதனால்தான், கிறிஸ்துவில் கொண்டுள்ள நம்பிக்கையில் அவர்களை வளர்த்து முதிர்ச்சியடையச் செய்கிற தூதுரைப்பணிச் செயல்பாடு “திருஅவையின் அனைத்து செயல்பாடுகளுக்கும் ஒரு வகைமுறையாக உள்ளது.” (நற்செய்தியின், மகிழ்ச்சி எண் 15) என்பதை நாம் உணர வேண்டும். இதற்கு, ஒன்றிணைந்த இறைவேண்டலும் செயல்பாடும் தேவை. திருஅவையின் தூதுரைப்பணிச் செயல்பாடு, கூட்டொருங்கியக்கமாகச் செயல்வடிவம் பெற வேண்டும் என்பதை இங்கு வலியுறுத்த விரும்புகிறேன். திருமுழுக்குப் பெற்றவர்களின் 'தூதுரைப்பணிப் பொறுப்பு மற்றும் புதிய தனித்திருஅவைகளுக்கு நல்கும் ஆதரவு,

ஆகிய இரண்டிற்கும் திருத்தந்தையின் திருத்தூதுக் கழகங்கள் செய்துவரும் உதவிகளையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அன்புப் பிள்ளைகளே, இளையோரே, வயது வந்தோரே, முதியோரே, உங்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். உங்கள் சாட்சிய வாழ்வு, இறைவேண்டல் ,தியாகம், தாராளப் பண்பு ஆகியவற்றின்மூலம் திருஅவையின் நற்செய்தி அறிவிக்கும் பணியில் தீவிரமாகப் பங்குபெறுங்கள். உங்களின் இந்த பங்கேற்பிற்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புச் சகோதரிகளே, சகோதரர்களே, எதிர்நோக்கில் ஊன்றிநின்ற இயேசு கிறிஸ்துவின் அன்னையாகிற மரியாவின்பால் நம் பார்வையைத் திருப்புவோம். இந்த யூபிலி ஆண்டிற்கென்றும் வரவிருக்கும் ஆண்டிற்கெனவும் நாம் செய்யும் இறைவேண்டல்களை அவரிடம் ஒப்படைப்போம். "கிறிஸ்தவ எதிர்நோக்கின் ஒளி ஒவ்வொருவரையும் ஒளிர்விப்பதாக, இதுவே அனைவருக்கும் நாம் வழங்கும் இறையன்பின் செய்தி! திருஅவை, மாந்தர் அனைவருக்குமான இறையன்பின் நற்செய்திக்கு, உலகின் ஒவ்வொரு பகுதியிலும் சான்று பகர்வதாக" ( யூபிலி பற்றிய ஆணை மடல் : எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது. எண்: 6 )

பிரான்சிஸ்